# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

15—8—71

★

உள்ளே......

பட்டினிப் பட்டாளமும் பூசாரிக் கூட்டமும் (சிறப்புக் கட்டுரை)

மகரந்தம் உதிர்ந்தது! (தலையங்கம்)

குறுந்தொகை மகளிர்! (இலக்கியம்)

தாய்மை! (நாடகம்)

சோழமாதேவி (தொடர் கதை)

விலை 20 காசு



முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி டாக்டர் பட்டம் பெற்றதைப் பாராட்டி திருமதி இராணி அண்ணா அவர்கள் பொன்னாடைப் போர்த்துகிறார்.

# தாய்மை

புலவர் அரிமதி தென்னகன்

இடம்; கனிகுலாப்பள்ளத்தாக்கு

பாத்திரங்கள்: தைமூர், கவிஞர் இர்மானி, மகனை இழந்த தாய்.

கவி-கிர்: மன்னர் மன்னா! இயற்கை அன்னை, தன் அழகையெல்லாம் இங்கேயே விட்டு விட்டாளா? சின்னக் குழந்தையின் சிரிப்பு போல் எங்கும் மலர்ந்திருக்கும் மலர்க் கூட்டங்கள் வண்ண விளக்குகளாய்க் காணும் இந்தக் கனிகுலாப் பள்ளத்தாக்கு கல்லாதவனையும் கவிஞனாக்கி விடும்போல் இருக்கிறது.

தைமூர்: சரியாகச் சொன்னீர்கள்; எனக்கே, கற்பனையைக் காட்டிக் கவிபாடு எனக் கட்டளையிடுகிறதே இந்தப் பள்ளத்தாக்கு.

கவிஞரே! என் அங்கியின் மேல் இடம் பெற்ற இந்த முத்துக்களைப் பார்த்தீர்களா? அத்தனையும் நல்ல முத்துக்கள்; ஐயாயிரத்துக்கு மேலிருக்கும்!!

கவி-கிர்: பார்த்தேன் மன்னா; நாணமிக்க ஒரு பெண்ணின் நயனங்களின் காணும் அடக்கமான ஒளி இந்த முத்துக்களில் காணும் சிறப்பாகக் கருதுகிறேன்.

தைமூர்: ஏதேது, கவிஞரே இந்தப் பள்ளத்தாக்கு பைத்தியமாக்கிவிடும் போலிருக்கிறதே.

கவி-கிர்: பள்ளத்தாக்கு என்னைப் பித்தனாக்கவில்லை மன்னா! குழந்தைகளின் கன்னக் கதுப்பு போல் மென்மையான கம்பள விரிப்பும், இந்தக் கூடாரத்தைச் சுற்றிக் காட்சி தரும் தங்க ஜாடிகளும், இதோ உங்களைச் சுற்றி வீற்றிருக்கும் இசைவாணர் கூட்டமும், இளவரசர்கள் வரிசையும், நடுவிலே தாங்கள் நாயகமாய் வீற்றிருக்கும் அழகுந்தான் மன்னா என்னைப் பைத்தியமாக்கிவிடும் போல் இருக்கிறது.

[மன்னனைக்காண மகனை இழந்த தாய் வ்ருதல்]

தைமூர்: யாரம்மா நீ; முன்னறிவிப்பு இல்லாமல் என் முன்னே வந்து நிற்கக் காரணம்......?

கவிஞர்: கண்களில் நெருப்பும், முகத்தில் கடுகடுப்பும், வாயில் துடிப்பும் கொண்டு உணர்வுப் பிழம்பாகத் தாங்கள் மன்னரை காண வந்தது எதற்காக?

தைமூர்: ஆமாம் தாயே; கனிவு பொங்க வேண்டிய கண்களில் கனல் தெரிப்பானேன்? உம்..... யாரம்மா நீ?

பெண்: சுருக்கமாகச் சொன்னாலே போதும் என்னும் அளவிற்கு நான் பெரிய குடும்பத்து பெண்ணல்ல; ஊரைச் சொன்னாலேயே புரிந்துகொள்ளும் அளவிற்கு உயர்ந்தவளும் அல்ல.

கவிஞர்: சுற்றி வளைக்காமல் சொல்லுங்கள்! யார் நீங்கள்?

பெண்: என் கால்கள் எங்கெங்கோ சுற்றியலைந்தனவே தவிர என் சொற்கள் என்றுமே சுற்றி வளைத்துச் செல்லாது.

வார்த்தைகளை நீட்டாமல் என் வரலாற்றைச் சொல்ல வேண்டுமானால், மன்னா! நான் ஒரு அனாதை; விளக்கமாகச் சொல்வதென்றால் நான் ஒரு பேதை.

தைமூர்: தாங்கமுடியாத துயரத்தில் இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். அம்மா! ஆண்டவனின் பிள்ளைகள் நாம் என்பது உண்மையானால், இந்த உலகத்தில் புழுக்கள் கூட அநாதைகளாக இருக்க முடியாதே.

என்னை வைத்துக் கொண்டு உங்களைப் பேதை என்றால் உலகம் ஏற்குமா தாயே.

அது போகட்டும்; உங்கள் பெயர்?

[சற்று நேர அமைதி]

கவிஞர்: ஏனம்மா உன் உதடுகள் துடிக்கின்றன? கண்கள் கலங்குகின்றன; உங்கள் உடல் இப்படி நடுங்குவானேன்?

மன்னாதி மன்னன் தைமூர் கேட்கிறார்......உன் பெயர் என்னம்மா?

பெண்: என்பெயர் ... என்பெயர் ... அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமா மன்னா?

அம்மா என்றும், தாயே என்றும், அழைக்கின்றீர்களே மன்னா, அதுதான் என் பெயர்; ஆம்மன்னா, என் பெயர் தாய்.

கவிஞர்: தாயே, தலைவணங்கிக் கேட்கிறேன், உன்தாய் நாடு எது?

பெண்: இந்தத்தாயின் தாயகம் இத்தாலிப் பெருநாடு; சால்னோ' என்ற பகுதியைச் சேர்ந்த இந்தப்பாவி மீனவ குலத்தைச் சேர்ந்தவள்.

தைமூர்:- ஏனம்மா இப்படிமனம் வெந்து, இதயம் நொந்து பேசுகிறாய்? பகவானின் அன்புப் படைப்பான தாய்க்குலத்தின் வழிவந்த நீ எப்படியம்மா பாவியாக இருக்கமுடியும்?

பெண்:- பத்துமாதம் சுமந்து பெற்று, பாசத்தோடு வளர்த்து ஆளாக்கிய ஒரே மகனையும் இழந்து தவிக்கும் நான் பாவி தானே—மன்னா.

தைமூர்: (நெஞ்சங்கலங்க) பெற்ற மகனை இழந்து விட்டீர்களா?

பெண்; அதுவும் உயிரோடு இழந்து விட்டேன். என் வயிற்றிலே பிறந்திருக்கக் கூடாது மன்னா அவன்... அவ்வளவு அழகு என்மகன்.

தைமூர்: அப்படியா? என்மகன் ஜிகாங்கீரைப்போலவே அவ்வளவு அழகனா?

பெண்: அழகன் மட்டுமல்ல மன்னா; அவனொரு மாபெரும் வீரன்.

தைமூர்: அப்படியா? என்மகன் ஜிகாங்கீரைப்போலவே மாவீரனா?

பெண்: அதுமட்டுமல்ல மன்னா, அன்பிலும், பண்பிலும், அறிவி

(4-ஆம் பக்கம் பார்க்க)

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 15—8—71 | இதழ் 5


# மகரந்தம் உதிர்ந்தது!

நடிப்பிலும், இசையிலும் புலமை மிக்கிருந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியும் இந்தக் கிழமை நம்மை விட்டுப் பிரிந்து விட்டாராம்.

எனவே, இனி அவர் நம்மையெல்லாம் ஏறெடுத்துப் பார்க்கமாட்டார். கனிவு மிக்க பார்வையால், ஆதுர மிகுந்த சொற்களால் இனி நம்முடன் உறவாட மாட்டார்.

எனவே, தமிழகச் சோலைக்குள்ளே செந்தமிழ்ச் சிந்திசை கேட்காது. தமிழல்லால் பிற மொழியில் பாட மாட்டேன் என்ற அந்த ரீங்காரம் ஒலிக்காது.



கலைத்துறையின் சிறப்புணர மாட்டாத கயமை மனத்தினரால், கலைத்துறை, கைப்புடன் எடுத்துக் காட்டிப் பேசப்பட்ட வேளைகளிலெல்லாம், தான் கலைஞன் என்று தோளுயர்த்தி நின்று இலட்சியப் பற்றின் சிகரமாகச் செம்மாந்திருந்த அந்தக் காட்சிகளை இனி மேல் பார்க்கவே முடியாது.

'நான் திராவிடன்'—என்று சொல்லக்கூட நாகூசிக் கிடந்த திராவிடர்களிடையே தன்னை ஒரு "திராவிட இயக்கத்துக்காரன்; திராவிடக் கலைஞன்" என்று வீறார்ந்த மொழியில் விண்டுக் காட்டிக்கொண்டிருந்த வேந்தனின் வீர முழக்கத்தைக் கேட்கவே முடியாது.

அரசியலும், அருங்கலையும் வேறு வேறு என்று பிரித்து வைத்துத் தனித்தனி உலகாகப் பிரித்தாண்ட பித்தர்களுக்கிடையே, அரிதாரம் பூசுவோரும், அரசியலில் தலைமை பூண முடியும் என்று செயல்படுத்திக் காட்டிய செயலுவமை, செந்தமிழ்ச் சந்தையை விட்டுச் சென்று விட்டது.

அன்பு, ஆதுரம், அரவணைப்பு, அருங்குணம் என்ற தனித்தனிப் பண்புகளின் கூட்டுச் சக்தியாக இதுவரை நம்மிடையே இருந்து வந்த கலைக்குரிசில் கே. ஆர். இராமசாமி அவர்களும் மறைந்துபோய் விட்டார்.

*1967*-பிறந்ததற்குப் பிறகு நம்மை விட்டுப் பிரிந்தோரின் பட்டியல் நீண்டுகொண்டிருக்கிறதனைப் பார்க்கும்போது, இவையெல்லாம் நம் இதயத்துக்கு வைக்கப்படும் தேர்வுகள் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது.

நாம் அரசியலில் நுழைவதென்ற துணிவு மேற்கொண்டபோதும் சரி, அரசியலில் தனியாக இயங்குவது என்ற முடிவு மேற்கொண்டபோதும் சரி, அதற்குப் பிறகும் இப்போதும், நமக்கு நாமே வைத்துக்கொண்ட தேர்வுகளும் ஏராளம், ஏராளம். இதுவரையில் நம்மைப் பற்றிக்கொண்ட தேர்வுகளில், நாம் வெற்றியினையே சந்தித்திருக்கிறோம்.

முழுமை பெற்ற மனிதராக விளங்கிய கே. ஆர். ஆர். அவர்கள், சில காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அண்மையில் வேலூர் மருத்துவ மனையை விட்டு வெளிவந்தபோது நோய் நீங்கிய தூய தோற்றத்தைக் கண்டுப் பூரித்தோம்.

அதன் பிறகு, நமக்குத் தெரியாமலே அவரை நோய், வாதைப் படுத்தி வந்திருக்கிறது என்பது இப்போதல்லவா புரிகிறது!

நோய் வாய்ப்பட்டிருந்த நிலையிலும், அவர் ஓடிஆடி தேர்தல் பணியாற்றிய காட்சிகளை மனக் கண்முன்பு கொண்டு வந்து நிறுத்திப் பார்க்கிறோம்! பெருமூச்சைத் தடுத்துக்கொள்ள முடியவில்லை.

கே. ஆர். ஆர். அவர்களது மறைவு, நாட்டவரை, சிறப்பாகக் கழகத்துக் காளையரை, மேலும் சிறப்பாகக் கழகக் காவலர்களையெல்லாம் அதிர்ச்சிக்கு ஆளாக்கி இருக்கிறது என்பதிலிருந்து நடிப்பிசைப் புலவரின் முழுமைத் தன்மை வெளிப்படுகிறது.

எனவே, திராவிடக்கலைஞராய், தீரராய் விளங்கிய கே. ஆர். ஆர். அவர்கள் எந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தாரோ, அந்த இலட்சியத்தை நாளும் நாளும் நாட்டிலே வளர்த்துக்கொண்டே இருப்பது என்பதுதான் நம் கடமையாக முன்னிற்கிறது.

காலம் வரும்போது மகரந்தங்கள் உதிர்வதனைத் தடுத்துவிட முடியாது. உதிர்ந்த மகரந்தங்கள், மற்றோர் பிறப்புக்கு உரியன என்பது சரித்திரம். அதன் வழிப்பட்டு ஆறுதல்பெற முனைகிறோம்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும், ஆற்றலிலும் அவனுக்கு நிகர் அவனே.

தைமூர்: ஆமாம்... ஆமாம், அன்பிலும் பண்பிலும், அறிவிலும் ஆற்றலிலும் என்மகனுக்கு நிகர் என்மகனேதான்.

பெண்: மன்னருக்குப் பிள்ளைப் பாசம் அதிகம் என்று கருதுகிறேன்.

தைமூர்: நிச்சயமாக; நானும் மனிதன்தானே தாயே.

பெண்: நான் அப்படியொன்றும் கேள்விப்படவில்லையே.

தைமூர்: மனிதனென்று?

பெண்: இல்லை... இல்லை, பிள்ளைப் பாசம் உள்ளவரென்று...,... பிள்ளைப்பாசம் உள்ளவராகத் தாங்கள் இருந்திருந்தால், இந்தத்தாய் ஏன் மகனை இழந்து தவிக்கப் போகிறாள்?

கவிஞர்: (துடிதுடிப்போடு) என்ன தாயே சொல்லுகிறீர்கள்? மகனை இழந்து தாங்கள் தவிப்பதற்கு எங்கள் மன்னர் மன்னரா காரணம்?

பெண்: பேயசித் சுல்தானை வெற்றி கொண்டவர் தாங்கள் தானே மன்னா.

தைமூர்: ஆமாம்

பெண்: அப்படியானால்... வாள் முனையின் கூர்மையினாலேயே நீதியை வாழவைப்பீர்களாமே மன்னா, அப்படிப்பட்ட தங்களால்தான் இந்த அபலை தன் மகனை இழந்தாள்.

மன்னா! பேயசித் சுல்தானின் ஆட்களைக் கொள்ளையடித்த தங்களின் வீரர்கள்தான் என் மகனையும் கொண்டுவந்து விட்டார்கள். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பார்களே ஆண்டவனைப்பற்றி...... மன்னா! வீரர்களின் தெய்வமாக விளங்கும் தங்களுக்குத் தெரியாமலா இந்தக் கொடுமை நடந்திருக்கும்?

தைமூர்: தாயே, இங்கேதான் தவறு செய்கிறீர்கள்.

கவிஞர்: ஆமாம் தாயே, பிள்ளைப் பாசம் தங்கள் கண்களை மறைக்கிறது. உண்மையைப் பொய் என்று கூறுமளவிற்குத் தங்கள் உணர்வு மங்கி வருகிறது தாயே ......மங்கி வருகிறது.

பெண்: உண்மைதான்......கடல் கடந்து வந்திருக்கிறேன்; காடுகளைத் தாண்டி வந்திருக்கிறேன். காட்டாறுகளைக், கடுமனமிருகங்களைக் கண்டு அஞ்சாது வந்திருக்கிறேன். உடலெல்லாம் நஞ்சாகக் காட்சிதரும் உலுத்தர்களின் கொத்தும் பார்வைக் கொடுமைகளுக்குத் தப்பி வந்திருக்கிறேன்.

கவி. கிர்: இத்தனைக்கும் சிறு கத்தி கூட கையில் இல்லை!!

பெண்: ஆமாம்!! மன்னா! தொடர்ந்துவந்து துயரங்களையும், எல்லையில்லாத் தொல்லைகளையும் ஏற்று, உங்களைக் காண வந்திருக்கிறேன்.

அத்தனைக்கும் காரணம்......

தைமூர்: உங்கள் நெஞ்ச உறுதி; வைரம் போன்ற மனம்!!

பெண்: இல்லை மன்னா......இல்லை; நெருப்பாற்றில் நீந்தி, எரிமலைகளைத் தாண்டி நான் உங்களிடம் வந்ததற்கு நெஞ்ச உறுதியல்ல காரணம்...எக்காலத்தும் வற்றாத இதயப் பாசம்; குஞ்சுகளைத் தூக்கிச் செல்லும் பருந்தைக் கொத்தத் துரத்திச் செல்லும் கோழிக்கு உள்ள அன்பு; மன்னா!

தன்னை யழித்துக்கொண்டு மகவை வளர்க்கும் தாய்மை தான் மன்னா காரணம்.

தைமூர்: (வியப்போடு) தாய்மை...! தாய்மை...!!

கவிஞர்: வாழையடி வாழையாகத் தாய்க்குலம் பாராட்டப்படுவதற்கும், தெய்வத் திருவுருவாய்ப் பெண்மையினை உலகம் பாராட்டிப் புகழ்வதற்கும் இந்தத் தாய்மைதான் மன்னா காரணம்.

தைமூர்: எத்தனையோ காடுமலைகளைக் கடந்துவந்தும், எந்த மிருகத்தாலும் உங்களுக்கு


## விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையார்,

"காஞ்சி", காஞ்சிபுரம்-3.


இடையூறு ஏற்படவில்லை......!! ஆமாம்! எல்லாம்வல்ல இறைவனே தங்கள் தாய்மைக்குத் தலைவணங்கி விட்டான்...தாயே ......தலைவணங்கி விட்டான்.

பெண்: வியப்பதற்கு இதில் ஒன்றுமில்லை மன்னா. மிருகங்களுக்கும் பாசமுண்டு; மிருகங்களுக்கும் இதயமுண்டு.

மன்னா! தாய்க்குப் பிள்ளையாகாத விலங்குண்டா? ஒரு பிள்ளைக்குத் தாயாகாத தந்தையாகாத மிருகமுண்டா?

ஒன்று தாய்மை உணர்ந்திருக்கவேண்டும்;இல்லையேல் தாய்மையை ஏற்றிருக்க வேண்டும்.

தூய்மையால் வாழும் இந்தத் தாயை, எந்தமிருகந்தான் மன்னா தாக்கவரும்?

தைமூர்: போதும் தாயே போதும்; போரில் புலியாக நான் இருந்திருக்கலாம்; இன்றுதான் தாயே நானும் ஒரு தாய்க்குப் பிள்ளை; ஒருபிள்ளைக்குத் தந்தை என்பதை முழுதுமாக உணர்ந்தேன்.

கவிஞர்: மன்னாதி மன்னர்களும் முன்நிற்கும் அஞ்சும் தங்களை நேருக்குநேர் சந்திக்கும் அந்த நெஞ்சம்.

கடும்புலியோ காட்டுத்தீயோ என நடுங்கும் உங்களிடம் நீதி கேட்டு நிற்க வைத்தப் பாசம்.

தைமூர்: அத்தனைக்கும் காரணம் தாய்மைதான். எத்தனைமுறை சொன்னாலும் அந்தத்தாய்மை இன்பத்தையல்லவா கொட்டுகிறது!!

தாயே! தாய்மையின் உருவே; உன்மகனைத்தேடி ஒப்படைக்கின்றேன்.

வானத்தையே பொடியாக்கினாலும், உங்கள் வதனத்தில் மகிழ்ச்சியொளி காணவைக்கிறேன்.

யாரங்கே! முந்நூறு குதிரைப் படை வீரர்களைஅனுப்பி இந்தத் தாயின் பிள்ளையைத் தேடச் சொல்லுங்கள்! மகிழ்ச்சிதானே தாயே!!

பெண்: மகிழ்ச்சி மன்னா......... மகிழ்ச்சி!! வீரத்தால்பொறிக்கப் பட்ட உங்கள் சரித்திரஏட்டில் தாய்மைக்கு மதிப்பளித்தார், தைமூர் என்ற நிகழ்ச்சி வைரத்தால் வரிகளாக்கப்படும் மன்னா!

வாழ்க மன்னா வாழ்க!! ஃ

# சோழமாதேவி



ராஜிமணாளன்

## [21]

## இடமாற்றம் ஒரு தடுமாற்றம்!

முருகபூபதியின் சடலம், அரசாங்க மரியாதைகளுடன் அல்லவென்றாலும், அதுபோன்ற அந்தஸ்த்துக்குச் சற்றும் குறைவுபடாத அளவுக்கு நல்லடக்கம் செய்யப் பெற்று ஒரு வாரகாலத்துக்கு மேலாகி விட்டது. என்றாலும் தளபதி தியாகராயர் மட்டுமல்லாமல், அனுராதபுரத்து அரண்மனையில் உள்ளவர்கள் அனைவருமே, பூபதியின் இழப்பில் மிகவும் கவலையடைந்திருந்தார்கள். உணர்ச்சிப் பிழம்பான தியாகராயரது துக்கத்தில் எல்லாருமே பங்கேற்றுக் கொண்டார்கள்.

சோழமாதேவியின் தமிழகப் பயணமும் தடைப்பட்டுப் போயிற்று. அரண்மனையின் அன்றாட நிர்வாகப் பணிகளிலே கூட மந்தம், வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியது. ஒருவரையொருவர் சந்திக்கும்போது ஏற்படுகின்ற சாதாரண உரையாடல்கள்கூட ஒடுங்கிப்போய் தேவையான அளவுக்குமட்டும் வினாவுக்கு விடை என்கிற வகையிலே நிகழ்ந்துகொண்டிருந்தது. பேரரசர் எள்ளாளரும், அரசியார் சோழ தேவியாரும்கூட அப்படித்தான்! அவர்களுக்கிடையேகூட பேச்சுக்களின் அளவு, தேவையை அனுசரித்தே இருந்தது.

இவைகளுக்கெல்லாம் முக்கியக்காரணம் பூபதியின் மறைவுதான் என்றாலும், அவனது மறைவு இயற்கையானதென்று ஆகியிருந்தால் இந்த அளவுக்குச் சோகம் இடம்பற்றி இருக்க முடியாது. செயற்கையான மரணம் அது. பெற்றுக்கொள் என்று கூப்பிட்டுக் கொடுக்கப்பட்ட களப்பலி அது. அதனால்தான் சோகத்தின் பரிமாணமும் அளவு கடந்திருந்தது.

எல்லாரைக் காட்டிலும், தளபதி தியாகராயர் செயலற்றவராகி இருந்தாலும், வெகுவிரைவில் தன்னைச் சமாளித்துக்கொண்டு, எதுவுமே நடைபெறாததுபோன்று செயல்படத் தொடங்கினார். அந்த செயலூக்கத்துக்குத் தடையாகி எதிர்மாறாக இருந்தது, அரண்மனையில் மற்றவர்களது போக்கு. தளபதி என்ன செய்வார்? காலிடறி விழவேண்டியவர் தானே அவரும்?

எள்ளாளச் சோழப் பேரரசரின் போக்கிலே கூட மாற்றம்காண முடியாதபோது யார்தான் என்னதான் செய்துவிட முடியும்?

மன்னர் அவர்களது மௌனத்துக்கு உண்மையிலேயே பூபதியின் மறைவுதான் காரணமா? வேறொன்றா? அனுமானிக்க முடியவில்லை மற்றவர்களால். எனவேதான் சோகத்தின் நிழல், பரவலாகப் படர்ந்திருந்தது.

அன்று காலை. கமலங்கள் கண்விழித்து ஐந்து நாழிகைப் பொழுது கழிந்துபோயிருக்கும். காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு நீராடி, தூய வெண்பட்டுத் துகிலணிந்து, மஞ்சள் பூசிக் குளித்த முகத்தில் நெற்றி நிரம்ப நீறு பூசிக்கொண்டு ஒரு சிவபக்தைபோன்று காட்சியளித்தார் சோழ தேவியார். அவரைப்போலவே வெண்பட்டாடையணிந்து உடலமெங்கும் நீறு பூசப்பட்ட திருக்கோலத்தில் மேலுடலை ஒரு வெண்பட்டுத்துண்டுமறைக்க அந்தப்புறம் வந்து சேர்ந்தார் மன்னர்.

ஒருவரை ஒருவர் அந்தக்கோலத்தில் அன்று சந்தித்துக் கொண்டபோது ஒருவரை ஒருவர் விழுங்கிவிடும் தன்மையில் பார்வை நிலைக்குத்தி நின்றது சிலவினாடிகள் வரையில்! அந்த வினாடியில் அந்த இருவரது இதயத்திலும்தான் எத்தனை எத்தனை எண்ண ஓட்டங்கள்! தங்கள் தங்களது வாழ்க்கைப் படத்தையேப் பார்த்துக் கொண்டார்களோ என்னவோ! அல்லது இளமைக்காலத்து எண்ணங்கள் கூட தோன்றி மறைந்திருக்கவும் செய்யலாம்!

பொதுவாகவே அவர்கள் இருவரும், மற்றவர்களது பூசனைக்கும் வணக்கத்துக்கும் உரியவர்களானாலும் பொதுவாக அன்றைய சூழ்நிலையில் அவர்களை யாராவது பார்த்தார்களானால், எல்லாம் வல்லவன் என்று எடுத்துரைக்கப்படும் இறைவன் உண்டா இல்லையா என்ற சர்ச்சைக்கு இதுதான் முடிவு என்று தீர்மானித்துச் சொல்லிவிடுவார்கள்! ஆமாம்! அரசரும் அரசியாரும், அன்றைக்கு தேவனும் தேவியும் போன்றுதான் காட்சியளித்தார்கள்! அதனால் தானோ என்னவோ, ஒருவரை ஒருவர் விழுங்கித் தீர்த்துக்கொண்டார்கள்!

இனிய-இன்பம் மலிந்த அந்தச்சூழலிலிருந்து விடுபட்டு தேவியார் அவர்கள், மன்னரைப் பார்த்து "இன்றைக்காவது சொல்லுங்கள் பிரபு! இந்த அரண்மனையை மறுபடியும் பொலியச் செய்யுங்கள் பிரபு! எங்கெங்கும் பரந்து, பரவிக்கொண்டேயிருக்கும் சோகத்தின் திரையை அகற்றி மறுபடியும் கலகலப்படைய நாம் என்ன செய்ய வேண்டும் என்று இப்போதே நீங்கள் எனக்குச் சொல்லிவிட வேண்டும்! ஏற்கெனவே நைந்திருக்கும் என் இதயம், இனிமேலும் இந்த மரண அமைதியினால், சுமக்க முடியாத எண்ணங்களை உற்பத்தி செய்துகொண்டு, மேலும் நைய விடாதீர்கள் பிரபு! சொல்லுங்கள்" என்று மன்னரின் அருகே வந்து நின்றார்.

அவரது இடுப்பில் கரங்கோத்துக்கொண்டு, அவரை அழைத்துக்கொண்டு அருகே இந்த இருக்கை வரைக்கும் சென்று, தேவியாரை அமரச் செய்துவிட்டு, "தேவி! உன்னை நான் இந்தக் கோலத்தில் நாளெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும்; பார்த்துப் பார்த்து ,என் இதயத்தை, நிறைவுகளால் நிரப்பிக் கொள்ள வேண்டும்போல் இருக்கிறது. அந்தப் பாக்கியத்தை நீ எனக்கு அருள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளவேண்டிய நேரத்தில், நீ என்னை எங்கோ அழைக்கிறாயே தேவி! அழைத்து விட்டாயே தேவி!" என்று சொல்லிவிட்டு, கூம்பிய முகத்தோடு, எதிரே இருந்த இன்னொரு இருக்கையில் மன்னரும் அமர்ந்து கொண்டார்!

"மன்னிக்க வேண்டும் பிரபு; இங்கே நிலவிக்கொண்டிருக்கும் மரண அமைதியினை என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை! மாற்றத்தை விரைந்து விழைகிறது என் மனம்" என்றார் தேவியார்!

"ஆமாம் தேவி! இப்போது உனக்கு மட்டுமல்ல; எனக்கும் ஒரு மாற்றம் தேவைதான்!" என்று சொல்லிவிட்டு, ஒரு கணம் எதையோ சிந்தித்தார்!

இருவருக்குமே ஒரு மாற்றம் தேவை என்று மன்னர் கூறியதனைக் கொண்டு, வேறு காரணங்களுக்காக தான் மறுபடியும் தமிழ்நாடு செல்லவேண்டும் என்று மன்னர் கூறிவிடக்கூடாதே என்று அஞ்சினார் தேவியார்! அந்த அச்சத்தை மிகுதிப் படுத்துபவர்போல் மன்னரும், "தேவி! இடமாற்றம் இதயத்தை மாற்றும் என்று நினைக்கிறேன்! இதுபற்றி உன் கருத்தென்ன தேவி? "என்றார்.

நெஞ்சிலே முள் தைத்தது போலிருந்தது தேவியாருக்கு. தான் கூறும் கருத்துக்களால், மன்னரது மனம் புண்பட்டுவிடக்கூடாது என்ற கவலை ஒருபுறமும், தான் மன்னரைப் பிரிந்துசென்று சிலகாலம் தனித்திருக்க வேண்டி நேரிந்துவிடக்கூடாதே என்ற அச்சம் ஒருபுறமும், பற்றிக்கொண்டன அவரை.

"உங்கள் கருத்துக்களையும், எண்ணங்களையும் மட்டுமே செயல்படுத்தும் நிலையில் நான் இப்போது இருப்பது ஒன்றுதான் நல்லது என்று நினைக்கிறேன்! அதற்கு அனுமதி வழங்கவும் கோருகிறேன் பிரபு" என்று கூறினார் தேவியார்!

"நீ மிகவும் பயந்துபோயிருக்கிறாய் தேவி! நீ தமிழ்நாடு செல்ல வேண்டியிருக்கக்கூடும் என்று கூறினேன் அன்று! ஆனால் அதற்குமுன் தேவி உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறேன்! இப்போது மறுபடியும் நீ பிரிவு கருதிக் கவலைப்பட்டு அஞ்சுகிறாய்! தேவி, ரோகண அரசரை மகாகாமாவில் சந்தித்து சமாதான ஓலையினைக்கொடுத்து வரக்கூறி அனுப்பினாயே வேட்டரையனை! அவன் என்ன ஆனான் தேவி? வந்துவிட்டானா? பதில் எதுவும் தந்து விட்டானா?" என்று பிரச்னையை வேறு கோணத்துக்குக் கொண்டுபோனார் மன்னர்.

வேட்டரையனைப்பற்றி மறந்தேபோய்விட்ட சோழதேவி, மன்னர் அவனைப்பற்றி நினைவு படுத்தியதும், மறுபடியும் நிகழ்ந்து முடிந்த அனைத்துச் சம்பவங்களையும் நினைந்து பார்க்க வேண்டியவராகிவிட்டார்.

"ஆமாம் பிரபு! பல்வேறு நிகழ்ச்சிகளின் கோவைகள், என்னை அவனைபற்றி மறந்துபோகும்படிச் செய்து விட்டன. இன்னும் அவன் திரும்பி வரவே இல்லையே! ஒருகால் அவன், ரோகணாவில் கைது செய்யப்பட்டிருக்கக்கூடுமோ?" என்றார் கவலையுடன் தேவியார்!

அது கேட்ட மன்னர், மெள்ளச் சிரித்துவிட்டு, ஏன் தேவி, ஓலை கொண்டு போனவனைப்பற்றி எவ்வளவு அக்கறையுடன் இருக்கிறாய் நீ? நீ அனுப்பியதோ, மிகமுக்கியமான ஒரு தகவல்; அதற்கான பதில் என்ன என்பதை அறிவதில்தான் உனக்கு எத்தனை ஆர்வம்?" என்று கேட்டுநிறுத்திவிட்டு, அவர் முகத்தின்மீது மறுபடியும் ஒரு வினாடி பார்வையை நிலைகுத்தி வைத்து எடுத்துக்கொண்டு, அமைதியானார்.

தன் பதிலின்மூலம் அந்த நிலையைச் சமாளித்துக்கொள்ள விரும்பினார் தேவி. "நான், அந்த அளவுக்கு அக்கறை குன்றிவிடவில்லை; பிரச்னையை நீங்கள் எடுத்துக்கொண்டுவிட்ட பிறகு, நான் அது தொடர்பானவைகளைவிட்டு விட்டேன்! அதனால்தான் அதுபற்றி எதுவும் நான் கேட்கவுமில்லை; பேசவும் இல்லை" என்றார். உண்மையில் அது சமாளித்துக்கொள்வதற்காகக் கூறப்பட்ட பதிலே தவிர, உண்மைநிலை அதுவல்ல என்பது தேவியாரின் உள்ளத்துக்கே தெரியும். மன்னரும் அதனைப்புரிந்து கொண்டார். தேவியார், சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொள்ள முயல்கிறார் என்பதையும், அன்றிரவு நிகழ்ந்த நிகழ்ச்சிகளின்பின் தொடர்ச்சிகளின் காரணமாக தேவியார், அனைத்தையுமே மறந்துவிட்டிருக்கிறார் என்பதையும் மன்னர் நன்கறிவார். அதனை அப்போது அவர்காட்டிக்கொள்ள விரும்பாமல், "அப்படியாதேவி! பிரச்னைகளை எனக்கே விட்டு விட்டாயா நல்லதுதான்! அப்படியானால் இப்போது நான்தான் உனக்குப் பதில் சொல்ல வேண்டும். இல்லையாதேவி" என்று கேட்டார். தேவியிடமிருந்து பார்வையின் மூலமே விடை கிடைத்தது. "நல்லது தேவி! முதலில் நாம், இப்போது இந்த அரண்மனையைவிட்டு வெளியேறுகிறோம். ஒரு புதிய உலகுக்குப் போகப் போகிறோம். போகும்முன், இதயத்திலிருக்கின்ற எல்லா சுமைகளையும் இறக்கிவைத்து விட்டுப்போக முடியாதென்றாலும், இதயத்தில் பாரம் இருக்கிறது என்பவைகளை முடிந்தவரையில் மறந்துவிட வேண்டும்; முயற்சி செய்து கொண்டே புறப்படுதேவி" என்று கூறிவிட்டு நடக்கத் தொடங்கினார். "இப்போதே புறப்படுகிறோமா பிரபு?" என்று கேட்டுக்கொண்டே எழுந்த தேவியிடம், "ஆமாம் தேவி! நீ உடைகளை மாற்றிக் கொள்ள நினைக்கிறாயா?" என்று கேட்டார். "அவகாசம் கொடுத்தால் மாற்றிக்கொண்டு ஒரு நொடியில் வந்து விடுகிறேன்" என்று கூறினார் தேவியார். "வேண்டாம் தேவி! இந்த உடையிலும், கோலத்திலும் நான் என்றென்றும் உன்னைப்பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று இப்போது தானே உனக்குச் சொன்னேன். புறப்படு!" என்று நடையைத் தொடர்ந்தார். தேவியும் மறுமொழி கூறாமல் மன்னரைத் தொடர்ந்தார்.

இருவரும் அரண்மனைவாயிலை அடைந்தபோது, அங்கே தேர் தயாராக இருந்தது. அதன் அருகே சென்று நின்று, 'ஏறிக்கொள் தேவி! "என்று சொன்னவர், சட்டென்று எதையோ எண்ணிக்கொண்டவராக வேண்டாம் தேவி! ஏறவேண்டாம்!" என்றுகூறிவிட்டு, தேரோட்டியிடம், ஒரு குதிரையினைக் கொண்டுவருமாறு கூறினார். தேரோட்டி ஓட்டமாக ஓடினான் குதிரை கொண்டுவர. மன்னரது செயல்கள்

பற்றி அரசியாருக்கு எதுவும் புரியவில்லை. ஏதோ ஒன்று நடக்கப்போகிறது என்கிற முறையில், நடக்கப்போவதனை, நடக்கின்றவரையில் பொறுத்திருந்தே பார்த்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார்.

தேரின் அருகில் தேவியார் நின்றுகொண்டிருக்கும்போது, மன்னர் கரங்களை மார்பின்மீது கட்டிக்கொண்டு, அங்குமிங்குமாக நடைபயின்றுக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் ஒரு குதிரைக்குச் சேணம் பூட்டி, அலங்கரித்துக்கொண்டுவந்து மன்னர்முன் நிறுத்தப்பட்டது.

அந்த வினாடியில் மன்னர், இளமை முறுக்கேறிய முதிர்ந்த வாலிபனைப்போல காணப்பட்டார். தேவியாரை மேலேற்றிவிட்டு, தானும் ஏறி அமர்ந்து கொண்டார். குதிரை பறக்கத் தொடங்கியது.

பாதுகாப்புப்படைஎதுவும் தங்களைத்தொடர்ந்து வருகிறதா என்று தேவியார் ஒருமுறை திரும்பிப் பார்த்தார், முகப்பைவிட்டுப் புறப்படும்போது எந்த அறிகுறியும் தென்பட வில்லை. மெய்க்காவல் வீரர்கள் வரும் அறிகுறிகூட காணப்படவில்லை. எனவே, எல்லாமாகச் சேர்ந்து தேவியின் இதயத்தில் ஒரு பெரும்புயலைக் கிளம்பி விட்டது. இதயத்தில் சுமை இருப்பதனை மறந்துவிட வேண்டும் என்று சொன்ன மன்னர், அவற்றை மறந்துவிடத்தக்க முறையில் நடந்துகொள்ள வில்லையே என்று தனக்குள் வருந்தினார், போகுமிடத்தை முன்னதாகச் சொன்னால் நான் மறுத்துவிடப் போவதில்லையே! என்று எண்ணிக்கொண்டபோது, தான் பெண்ணாகப் பிறந்த அந்தபிறப்பின்மீதே ஒருவகை வெறுப்புக் கொண்டார். பறந்து கொண்டிருந்த குதிரை, ராஜ பாட்டையினைக் கடந்து, குன்றுகளும், காடுகளும் மலிந்த ஒரு பாதையில் திரும்பியது. அது யாழ்ப்பட்டினத்துக்குச் செல்லும்பாதை என்பதைப் புரிந்து கொண்டார் தேவி. "நாம் வெள்ளவத்தைத் துறைக்குப்போய்க் கொண்டிருக்கிறோமா பிரபு?" என்று கேட்டார். சொற்களின் ஒலி வேகத்தை, காற்றின் வேகம் அடித்துக்கொண்டுப் போயிருக்க வேண்டும்! மன்னரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. மன்னரது கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்து பின்னர் அவரிடம் இதுபற்றிக் கேட்க வேண்டும் என்று தன்னுள் எண்ணிக்கொண்டு அவரை அழைக்க முனைந்த சமயம், சட்டென்று குதிரை பாதை மாறியது. அந்தப் பாதையின் இரு மருங்கிலும் அடர்ந்த காடுகள் காணப்பட்டன. பாதையும் குறுகலாக இருந்தது. ஒருவேளை மன்னர் வேட்டைக்குப் போகப் போகிறாரோ? என்று ஒரு கணம் நினைத்துக்கொண்டவர், அடுத்த வினாடியே தன் தவறைத் திருத்திக்கொண்டார். வேட்டை விளையாட்டு என்பது மன்னர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு என்றாலும், தன் இதய தெய்வம், அந்த விளையாட்டை எந்த நேரத்திலும் விரும்பியதில்லை; விளையாடியதுமில்லை. மிருக வதையினை எந்தக் காரணத்துக்காகவும், எவரும் எந்தக் காலத்திலும் கைக்கொள்ளக்கூடாது என்று மன்னர் பறையறிவித்திருப்பதை நினைவுக்குக் கொண்டு வந்தார். அவ்வாறு பறையறிவிப்பதற்கு அதற்கான உத்திரவைப் பிறப்பிப்பதற்கு முன் அது பற்றித் தன்னிடம் கலந்து பேசியதும், அப்போது மிருகவதை முழுதுமாகத் தடுக்கப்பட்டால், காடுகள் அடர்ந்த இந்த நாட்டில், கொடும் மிருகங்களின் எண்ணிக்கை மிகுந்து விடுவதுடன், அவைகளின்

★★★★★★★★★★★★★★★★★★★★

# நலத்துறை அமைச்சரே நாளும் வாழி!

(க. பா. வரதன்)

பாரதியார், திரு.வி.க., வ.உ.சி. யார்,
பரலிசு. நெல்லையப்பர் இவர்க ளெல்லாம்
பாருக்கும் பைந்தமிழ்க்கும் தொண்டு செய்த
பரம்பரையைச் சேர்ந்தவர்கள்! அவர்களோடு
நேர்வைத்து எண்ணுதற்குத் தகைமை கொண்ட
நிறைகுணத்துப் பெருங்கொள்கைச் சான்றோய் அண்ணன்
சீர்காக்கும் செழும்படைமுன் வரிசை வீரா!
சினந்தறியா அன்பழக வாழ்க! வாழ்க!!

பேருக்கு ஆசிரிய ராயி ருந்து
பிழைப்பொன்றே குறியாகி நாளைப் போக்கி
யாருக்கும் தெரியாமல் வாழ்ந்து நாட்டை
"யாராண்டால் நமக்கென்ன? குடிக்கும் கஞ்சி
நீருக்கு உடல் வளர்த்தால் போதும்! என்ற
நினைப்போடு வாழாமல், தமிழ் வழங்கும்
பாருக்குத் தொண்டாற்றத் துணிந்து வெற்றிப்
பாதையினைக் கண்டவரே! வாழ்க! வாழ்க!

தமிழாய்ந்த புலவன்தான் நாட்டை ஆளத்
தகுதியுளான்! என்றுரைத்த புதுவை யாரின்
அமுதமொழி மெய்யாகித் தமிழர் நாட்டை
அருந்தமிழை ஆய்ந்தவர்கள் ஆளுகின்றார்
இமைப்போதும் தன்னலத்தை எண்ணாத் தங்கள்
இனியபணி தொடரட்டும்! கலைஞர் தங்கள்
அமைச்சரவைக் கணிசெய்யும் உங்கள் தொண்டுக்
காதரவு தருவதற்கு மக்கள் உள்ளார்!

நோய்க்குறைவு நலத்துறையின் வளர்ச்சியாகும்
நூலிடையார் இரண்டுக்கு மேற்பெறுத
சேய்க்குறைவு குடும்பநலத் திட்டமாகும்!
சேமமுற அதுவொன்றே வழியு மாகும்!
காய்பழுத்தால் கனியாகும்! அண்ணா கண்ட
கனவுபலித் திடுமானால் சிரிப்பான் ஏழை!
வாய்ப்பதனைத் தந்துவிட்டார் நாட்டை ஆள!
வளங்கண்டு நலங்காண வாழ்த்துகின்றோம்!

★★★★★★★★★★★★★★★★★★★★

இனப் பெருக்கம் காரணமாக, அவைகள் நாட்டுக்குள் சரளமாக வந்து போகும் நிலைமை உருவாகி விடக்கூடும் என்றும், சில கட்டுப்பாடுகளுடன், அதனை அனுமதிப்பதே விரும்பத்தக்கது என்றும் தான் எடுத்துக் காட்டியதும் நினைவுக்கு வந்தது. அதற்கு மன்னர் எல்லைப் பாதுகாப்பினைப் பலப்படுத்திவிட்டால் போதும் என்றும், காட்டு மிருகங்களும், மனிதர்களைப் போன்றே ஏதோ ஒரு தேவைக்காகவே உருவாக்கப் பட்டிருக்கின்றன வென்றும், அதனை அழிப்பதை தான் அனுமதிக்கவே முடியாது என்று மறுத்துக் கூறியதும் படம்போல் தோன்றவே, வேட்டைக்கு மன்னர் செல்கிறார் என்று நினைத்துப் பார்ப்பதே தவறு என்று முடிவு செய்து கொண்டார்.

அவராகத்தான் சொல்லட்டுமே என்று ஏன் பொறுத்துக்கொள்ளக்கூடாது என நினைத்துப் பார்த்த போது, அந்தப் பயணம் எவ்வளவு நேரத்துக்கு நீடித்துக் கொண்டிருக்கும்? என்ற புதிய ஐயம் பற்றிக் கொண்டது. எவ்வளவு நேரமானாலும் சரி! மன்னராக இதுபற்றித் தெரிவிக்கும் வரையில் அவரிடம் எதுவுமே கேட்கக் கூடாதென்றும், அண்மைக் காலமாக மன்னரிடம் காணப்படும் இந்தப் புதிய போக்கை, வெகுநாட்களுக்கு நீடிக்க விடக்கூடாதென்றும் தன்னுள் முடிவு செய்து கொண்டார்.

குதிரை, காட்டுப் பகுதியைக் கடந்து, ஒரு மலைப் பாதையில் போய்க் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அந்தப் பாதையையும் கடந்து, மரம், செடி, கொடிகள் அடர்ந்த வீதியிலே திரும்பியது. இப்போது விரைவில் ஒரு கிராமத்தைத் தாங்கள் எட்டப் போகிறோம் என்று எண்ணிக் கொண்டார் தேவியார். அந்த எண்ணம் வீணாகவில்லை.

அரண்மனையை விட்டுப் புறப்பட்டு ஏறக்குறைய மூன்று நாழிகை நேரமாவது இருக்கும். தேவியார் எண்ணியது போலவே, குதிரை ஒரு சிறிய சிற்றூருக்குள் போய்க் கொண்டிருந்தது. மலைப் பகுதியில் அந்த ஊர் அமைந்திருந்ததால், பாதைப் புழுதிகள் அவர்களுக்கு இடையூறாக இருக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக மற்றொரு அனுகூலமும் அவர்களுக்கு அமைந்திருந்தது.

ஒரு நாட்டின் பேரரசரையோ, பேரரசியையோ யாரும் அறியாதிருக்க மாட்டார்கள் என்று கூற முடியாது. எத்தனையோ பேர் இருக்கக்கூடும். ஊரில் ஒரு சிலருக்காவது மன்னரையோ, மன்னியையோ தெரிந்திருக்க வாய்ப்புண்டு. அந்த வாய்ப்புடையவர்கள், மன்னர் போய்க் கொண்டிருக்கும் அந்தச் சிற்றூரில் மட்டும் இல்லாமற் போய்விடுவார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படிப்பட்டவர்கள் சிலரேயானாலும், அவர்கள் மூலம் ஊர் முழுதுக்குமே தெரிந்துவிட முடியாதா? திரண்டு வந்துவிடாதா?

மகிழ்ச்சிக்குரிய ஒரு பேராபத்து இது. இன்ப வேதனை என்று வேறு எதற்கோ பெயரிட்டிருக்கிறார்கள். அதனைவிட இன்பமிகுந்த ஒரு வேதனைதான் இது!

மன்னரும், மன்னியும் புறப்படும் முன்பு எளிய வெண்பட்டாடைகளே பூண்டிருந்தார்கள். நீறு பூசப்பட்ட சிவக் கோலத்தில் இருவருமே இருந்தார்கள். இத்தகைய கோலத்தில் அவர்கள் இருவரையும் கண்டவர்கள் அரண்மனையிலுள்ளவர்களைத் தவிர, வெளியார் யாரேனுமிருக்க முடியாதே?

அவர்கள் இருவரது இந்தக் கோலம், அந்தச் சிற்றூரில், அவர்களை எதிர்ப்பட்டோரிடமிருந்து காப்பாற்றியது. எனவே, அந்த வேதனையிலிருந்தும் அவர்கள் தப்பினர்!

சிற்றூரின் எல்லையில் சென்றுகொண்டிருந்தது குதிரை. சற்றுத் தூரத்தில் ஒரு சிறிய குன்று ஒன்றின்மீது, குடவரை போன்ற கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டார் தேவியார். அது ஏதோ ஒரு பௌத்த ஆலயமாக இருக்கக்கூடும் என்று தன்னுள் எண்ணிக்கொண்டபோது, குதிரை நின்றது. குதிரையின் மீதிருந்தபடியே மன்னர், சுற்றிலும் பார்வையைப் பரப்பிவிட்டு, "இங்கேதான் தேவி நாம் இறங்கப் போகிறோம்" என்று கூறி, தேவியின் கரத்தைப்பற்றி, கீழே இறக்கி விட்டுவிட்டு, அவரும் இறங்கினர்.

"ஒரு கால்நாழிகை நேரம் இங்கே அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டு, பிறகு நாம் போகவேண்டிய இடத்துக்குப் போகலாம் தேவி!" என்று சொல்லிக் கொண்டே, குதிரையை பிடித்துக்கொண்டு, சாலையை ஒட்டி ஓரமாக வானோங்கி வளர்ந்திருந்த ஒரு அரச மரத்தில் குதிரையைப் பிணைத்துவிட்டு, அமர்ந்து கொண்டார். அவருக்கருகே அமர்ந்து கொண்ட தேவியிடம், அண்மையில் தெரிந்த குன்றினைச் சுட்டிக் காட்டி, "அந்த குன்றுக்குள்தான் தேவி, இப்போது நுழையப் போகிறோம்" என்றார்.

அடக்கமுடியாத சிரிப்பினை வெளிப்படையாகவே சிந்திவிட்டு தேவியார் "என்ன பிரபு, குன்றுக்குள் நுழையப்போகிறோமா?" என்றார். தேவியின் வினா எதனைச் சுட்டிக் காட்டுகிறது என்பதைப் புரிந்துகொண்ட "மன்னரும், ஆமாம் தேவி! அந்தக் குன்றுக்குள் நுழையத்தான் போகிறோம்! ஏறப் போவதில்லை!" என்று சொல்லிவிட்டு அவரும் சிரித்துக் கொண்டார். வியப்பால் சோழதேவியின் விழிகள் விரிவடைந்தன! "இங்கே வரவேண்டும்; வரவேண்டும் என்று நீ எத்தனையோ தடவைகள் என்னை அழைத்திருக்கிறாய் தேவி! ஆனல், அந்தப் பேறு இன்றுதான் உனக்குக் கிடைத்திருக்கிறது!" என்றார் மன்னர்!

"எத்தனையோ தடவைகள் நான் இங்கே வர வேண்டும் என்று அழைத்தேனா?" என்று கேட்டு, ஒரு கணம் சிந்தித்தார்! பழைய நினைவுவரப் பெற்றவர்போல முகமலர்ந்து, "பிரபு, தப்பனை கிராமமா இது! குகைக்கோயிலைக் காணப் போகிறோமா இப்போது?" என்று ஆர்வமிகுதியால், இளம்பெண் ஒருத்தியைப்போல துள்ளிக்கொண்டே எழுந்தார்.

"ஆமாம் தேவி! அந்தக் குகையின் அற்புதங்களில்தான் இப்போது மூழ்கப் போகிறோம்!" என்றார்!

ஆனல் அவர்கள் இருவருக்குமே தெரியாது, அங்கே அவர்களை எதிர்பாராத வேறோர் அற்புதம் நிகழ்ந்துகொண்டிருக்கிறதென்று!

(வளரும்)




# வாழியென வாழ்த்திடுவோம்!

( திருவாரூர் முத்துராமன் )

ஆகஸ்ட்டுப் பதினைந்தை அகத்திலேற்றி
அந்நாளைப் பொன்னாளாய் ஆக்கத் தங்கள்
பாகனையும் இன்னுயிரை ஈந்தார் தம்மை
பரிதிஎதிர் முன்நிறுத்திப் போற்றி! போற்றி!

சத்தியத்தைக் கரத்தேந்தி சாந்தி மார்க்கச்
சங்கொலித்துப் போராடி எளிமை வாழ்வில்
எத்திக்கும் புகழோச்சி இந்த நாட்டின்
இழிவொழித்த காந்திமகான் பாதம் போற்றி!

உயிர்காக்க உணவுக்கு அலைகின் றோம்யாம்!
உடல்காக்க உறையுளினைத் தேடு கின்றோம்!
பயிர்காத்துப் பொன்காக்க அயர்ந்தோ மில்லை!
பாவையர்தம் மெய்தீண்ட அலுத்த தில்லை!!

தாய்க்கரத்து தளையுடைத்து விட்டோம்! பின்றைத்
தாயவளின் தளிர்மேனி தழுவும் புண்கள்
போய்த்துடைக்க அறிவற்றோம்! துடைப்பார் தம்மை
பொல்லாங்குப் பொய்யுரையால் இகழ்தல்செய்தோம்!

செஞ்சோற்றுத் துருத்தியராய் இருந்துவிட்டோம்!
செகம்பற்றி நினைத்ததற்கு மறந்து போனோம்!
வஞ்சினத்தை வாய்மடுத்தோம்! வகையு மற்றோம்!
வந்தவுயர் சுதந்திரத்தைக் கருத வில்லை!

பிறந்தவுடன் சிரிக்கின்ற பிள்ளை இல்லை;
பிறந்தவரும் இறவாமற் போன தில்லை;
இறந்தன்பின் எடுத்தேக ஏது மில்லை;
இசையொன்றே எம்மனோர்க் கிருந்தால் போதும்!

வாழையடி வாழையென வாழ்ந்து விட்டோம்;
வாழ்ந்தவரைப் போதுமினி; வையம் போற்ற
'கோழையர்கள்' எனுங்கொடிய சொல்லை மீட்டு
கோபுரத்து மீதேறிக் கொடி நாட்டுங்கள்!

பொற்குவியல் வைரமணி தங்கப் பேழை
புலிவீரம் போர்த்திறமை பொதுவை யாகும்
சொற்களங்கள்; சுவைநூற்கள் நிலத்திற்கெல்லாம்
நினைக்கசுவை உரிமையர்நா மென்போம்வாரீர்!

இதந்தருநற் பாக்களிலே காண்ப தெல்லாம்
இனிக்கின்ற தென்றால்நீர் வாய்மடுத்து
"சுதந்திரத்தை" வாழியென வாழ்த்தி நாளும்
சுற்றிவர வெற்றியுலா கூட்டுவீரே!

★



# ★ குறுந்தொகை மகளிர் ★

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான 'குறுந்தொகை', பண்டைத் தமிழருடைய காதல் வாழ்வினைத் தெள்ளிதின் உணர்த்தும் தீந்தமிழ் இலக்கியமாகும். 'நல்ல குறுந்தொகை' எனப் பழம் பாடல் ஆசிரியரால் பாராட்டப்பெறும் தகுதி படைத்தது, இந்நூல். சங்க காலத்தில் 'அக வாழ்வு' சிறப்பிடம் பெற்றிருந்ததனை, இந்நூல் வாயிலாக அறிந்து கொள்ளலாம். மேலும், அக்கால மகளிர் பண்பாட்டுச் சிறப்பினைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியக் கண்ணாடியாகவும் இந்நூல் திகழ்கின்றது.

சங்ககால மகளிர் காதலைக் 'கண்' எனக் கருதினர். காதல் வாழ்வே களிப்பூட்டும் வாழ்வு எனப் போற்றி மகிழ்ந்தனர். அக வாழ்வே சுகவாழ்வு என எண்ணினர். காதலையே உயர்வாக மதித்தனர்; தலைவனையே தெய்வமாகத் துதித்தனர். தலைவனோடு தான் கொண்டுள்ள காதல் எப்படிப்பட்டது என்பதனைக் குறுந்தொகைத் தலைவி ஒருத்தி கூறுவதைக் காணலாம். தலைமகன் மறைந்து நிற்கின்றான். தோழி அவனைப் பழித்து உரைக்கின்றாள். பழித்துரைக்கும் தோழியிடம் தலைவனின் நட்பை மிகுத்துரைக்கின்றாள், தலைவி.

"நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்
தன்று;
நீரினும் ஆர்அளவின்றே—சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு
நட்பே."

எனத் தலைவனோடு கொண்டுள்ள நட்பின் சிறப்பினை நயம்படக் கூறுகின்றாள், தலைவி. இருவரின் நட்பும் வெறும் நட்பல்ல—விழி கலந்த நட்பு! உதட்டளவு நட்பல்ல — உள்ளத்தளவு நட்பு! விரிந்து பரந்திருக்கும் பூமியைக் காட்டிலும் அஃது அகலமுடையது; எட்டாத உயரத்திலுள்ள வானத்தைக் காட்டிலும் உயர்வானது; ஆழ்கடல் நீரினைக் காட்டிலும் மிகவும் ஆழமுடையது. என்னே, அக்காரிகையின் காதல் உணர்வு! காதலோடு இணைந்த வாழ்வே — காதலனோடு பிணைந்த வாழ்வே அக் குறுந்தொகை மடந்தையின் கோல வாழ்வாகும்.

காதலித்துக் களவு மணம் புரிய, பெற்றோர் உடன்படவில்லை எனில், 'உடன்போக்கு' நிகழ்த்தும் வழக்கம் அக்காலத் தமிழகத்தில் இருந்தது. உயிராக மதித்த ஒருவனோடு உடன்போக்கு நிகழ்த்துவதை உயரிய செயலாக நினைத்தனர், அக்கால நேரிழையர். கேவலமாக நினைக்கும் கீழ்மைக் குணம் அன்றில்லை. 'உடன்போக்கு' பற்றிக் குறுந்தொகைப் பாடல் ஒன்று கூறுவதைக் காணலாம்.

"வில்லோன் காலன கழலே ;தொடியோள்
மேல்அடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல்? அளியர்தாமே......
வேய்பயில் அழுவம் முன்னியோரே!"

இதன் மூலம், மூங்கில் நிறைந்துள்ள பாலைநிலப் பரப்பின்வழி, வில்லும் வீரக் கழலும் உடைய தலைவனோடு, மெல்லடிமேல் சிலம்பு அணிந்துள்ள தலைவி உடன்போக்கு நிகழ்த்தும் உயரிய காட்சி படம் பிடித்துக் காட்டப்படுகிறது. "சிலம்புகழி நோன்பு" என்னும் சடங்கினை நடாத்திய பின்னரே, மணம் முடிக்கும் வழக்கம் அன்று இருந்தது. "மேல்அடி மேலவும் சிலம்பே" என்னும் அடியின்மூலம் மணமாகா மங்கை மனமொத்த மறவனுடன் மனங்கலங்கா நிலையில் உடன்போக்கு நிகழ்த்துவது கூறப்பட்டது.

## இலக்கியம்

'பொருள்வயின் பிரிவு' என்பது மணமாவதற்கு முன்பும் நிகழ்வது உண்டு. பொருள் ஈட்டுவதற்காக தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலை, தலைவனுக்கு ஏற்படும். அங்ஙனம் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து வருந்துகின்ற தலைவியின் நிலையோ மிகவும் இரங்கத்தக்கதாகும். இத்தகைய பிரிவினால் ஏங்கித் தவிக்கும் ஏந்திழை, இரவெல்லாம் தூங்காது துயரக் கடலில் வீழ்ந்து துடித்துக் கொண்டிருப்பாள். தோழாத் துணைவனின் பிரிவால் தூங்காமல் தவிக்கும் தோகைமயில் ஒருத்தியைப் பாட்டோவியமாகப் படைக்கின்றார் பதுமனார்.

"நள்ளென்ற யாமம்; சொல் அவிந்து
இனிது அடங்கினரே மாக்கள்; முனிவு
இன்று,
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே!"

என்பது குறுந்தொகைத் தலைவியின் வேதனைக் குறலன்றோ? நள்ளிரவு நேரம். பேச்சடங்கி. மூச்சடங்கா நிலையில் ஆழ்ந்த நித்திரையில் வீழ்ந்து கிடக்கின்றனர், அவனி மாந்தர் அனைவரும். உலகமே உறங்குகிறது. ஒருத்தி மட்டும் உறங்கவில்லை. ஒருவனை நினைந்து உழன்று கொண்டிருக்கின்றாள். அந்த ஒப்பற்ற தலைவியின் ஓலக்குரல்—அழகுப் பதுமையின் அவலக் குரல்—என்றும் அழியாத இலக்கியமாகக் குறுந்தொகையில் நின்று நிலவுகிறது; இன்றும் நம் இதயத்தை ஈர்க்கின்றது. 'உலகின் எல்லா உயிர்களும் உறங்கும்போது, யான் ஒருத்திமட்டும் தான் உறங்காமல் இருக்கின்றேன்! என உறுதியோடு உரைக்கின்றாள் தலைவனைப் பிரிந்து தவிக்கும் நிலையில் தன்னைப்போல் இத்தாரணியில் யாரும் இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இங்ஙனம் இயம்புகின்றாள். ஆனால் அவளைப்போலவே எத்தனை பெண்கள் அல்லற்படுகின்றனரோ? தலைவனின்மேற் கொண்டுள்ள தணியாத பாசம்தான், இந்நிலைக்குக் காரணமாகும். இத்தகைய பாசங் கொண்ட பாவையரால்தான் பைந்தமிழ்ப்பண்பாடு பாரினில் சிறந்ததாக மதிக்கப்பட்டு வருகிறது.

உண்மை அன்பின் உறைவிடமாகத் திகழ்ந்தனர், அக்கால உத்தமியர். 'உடன் திரும்புவேன்' என்னும் உறுதிமொழி கூறிப் பிரிந்து சென்றான் தலைவன். உடன்பட்டு வழியனுப்பினாள் தலைவி.

மு. சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,

(15-ம் பக்கம் பார்க்க.)

# சிறுகதை!

# மகரந்தங்கள் உதிர்கின்றன

— மலரடியான் —

மேல் மாடியில் பொழுது போக்க விமலா நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கண்களில் ஒருவிதமான பளபளப்பு தெரிந்தது. அது முகத்திலும்கூட கிடந்தது.

அவளுக்கு சில நாட்களுக்கு முன் ஏற்பட்ட ஒரு வெற்றி அவளுடைய மனத்தில் அலட்சியத்தை ஏற்படுத்திவிட்டது.

மென்மையான காற்று வீசிக்கொண்டிருந்தது. அந்தக் காற்றில் அவிழ்த்து விடப்பட்டுக் கிடந்த விமலாவினுடைய கூந்தல் சலசலத்துக் கொண்டிருந்தது.

விமலாவின் கையில் கிடந்த கவர் ஒன்று காற்றில் துடி துடித்துக் கொண்டிருந்தது. அந்த கவரின் துடிப்பைவிட அவளுடைய மனம் வேகமாகத் துடித்தது. ஏன் துடிக்காது?

அடுத்த மாதம் தனக்கு கணவராக வரப் போகிறவர்—இப்பொழுதைய காதலர் எழுதிய கடிதம் அல்லவா அவளுடைய கையில் கிடந்தது.

காலையில் தபால்காரன் கடிதத்தை தந்துவிட்டுப் போனதில் இருந்து இதுவரை அவள் அந்த கடிதத்தை இருபது தடவைகளுக்கு மேல் படித்து விட்டிருப்பாள்.

மேல் மாடியின் கைப்பிடி சுவற்றில் ஊன்றியபடி நின்றிருந்த அவள் மீண்டும் ஒரு முறை கடிதத்தை எடுத்துப் படிக்கத் துவங்கினாள்.

முதல் முறை படிக்கும்போது ஏற்படுகின்ற அதே உணர்வுதான் அவளுக்கும் ஏற்பட்டது. ஒரு அணுவளவும் குறைந்ததாகக் காணோம்.

நாலாக மடிக்கப்பட்டுக் கிடந்த கடிதத்தைப்பிரித்தாள். மணியான கையெழுத்தில் எழுதப்பட்டு இருந்தது. கருத்து ரத்தினச் சுருக்கம். படிக்கத் துவங்கினாள் விமலா.

இந்திரா நகர்,
15—5—'71.

அன்பு விமுவுக்கு,

நலம், நலமறிய ஆவல். உன் கடிதம் கிடைத்தது. ஏன் உன் பரிட்சை நம்பரைக் குறிப்பிடவில்லை. உன் பதிலை உடனே எழுதுக. என் அன்புப் பரிசுகள் உனக்கு. என் அந்த பரிசு......

உன் பதிலைக்
காண விரும்பும்,
N. பலராமன்.

கடிதத்தை முடித்ததும் சுற்றுமுற்றும் பார்த்தாள். யாராவது வருகின்றார்களா என்று. யாரையும் காணோம்.

அந்த கடிதம்அவளுடைய உதட்டருகே வந்தது. அவளுடைய இதழ்கள் துடித்தன. மீண்டும் பழைய படியே அந்த கடிதம் விலகி நின்றது.

ஆனால்......!

அந்தக் கடிதத்தில் முன்பைவிட ஒரு மாற்றம் ஏட்பட்டு இருந்தது.

பலராமன் என்று கையெழுத்து இடப்பட்டு கிடந்த இடம் தண்ணீரில் நனைந்துவிட்டதுபோல் காணப்பட்டது.

எப்படி வந்தது இந்த மாற்றம்...?

சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

விமலாவினுடைய மனம் ஏதேதோ நினைக்கின்றது. எப்படிப்பட்ட நினைவு தோன்றினாலும் அதில் முழுமையாகப் பளிச்சென்று பலராமனுடைய முகம் தெரிகிறது. வேறு எதுவும் தெரியவில்லை.

விமலாவுக்கு தன்னைப் பற்றி நினைக்கும்பொழுது ஒருவிதமான கர்வ சிந்தனை ஏடுபடுகிறது.

தன்னை முறைப்படி மணந்து கொள்ள அவளுடைய உறவினரிலேயே ஆறு பேருக்கு முறை இருந்தது.

விமலாவுக்கு அவளுடைய சின்ன அத்தைமீது ஒருவிதமான அபிரிதமான பிரியம். அவளுடைய அத்தைக்கும்அப்படியே. சின்ன அத்தை விமலாவை தன் மகனுக்கு மணமுடித்து வைக்க யோசித்திருந்தாள்.

விமலாவின் சிறிய அத்தையின் மகன் மூர்த்தியும், பெரிய அத்தையின் மகன் அரியும் ஒரு கல்லூரி மாணவர்கள்.

இருவருக்கும், இருவரும்தான் உயிர்நண்பர்கள், ஒருவர் குறையை மற்றவரிடம் சொல்ல.

இருவரும் மனதார விமலாவை விரும்பினர்.

ஆனால்......!

யாரும் தன் கருத்தைத் தைரியமாக விமலாவிடம் வெளியிடவில்லை.

ஆனால் மறைமுகமாக சொல்லியிருந்தனர்.

விமலா பலராமனை விரும்புவாள் என்று யாருமே நினைக்கவே இல்லை.

ஆனால், விதி அப்படித்தான்!

விமலா வின் விருப்பை அழிக்க அவளுடைய அப்பா விரும்பவில்லை. அதனால் உறவு இருக்கவே பலராமனுக்கே விமலாவை மணம் முடிக்க ஏற்பாடாகி விட்டது.

விமலாவின் முடிவு மற்றவர்களுக்கு தெரிய ஆரம்பித்தது.

கடைசியாக அரிக்கும், மூர்த்திக்கும் எட்டியது. அரிதான் புழுவாய் துடித்தான், மூர்த்திக்கு உள்ளத்தை சம்மட்டியால் அடிப்பதை போல் இருந்தாலும் உள்ள உணர்ச்சியை வெளியிடவே இல்லை.

அரியின் முகத்தில் இலேசான குறுந்தாடி இப்பொழுதெல்லாம் காட்சி அளித்துக்கொண்டிருந்தது—அது அவனுடைய மனவேதனையை காட்டியது.

நாட்காட்டியில் நாளுக்கு நாள் தாள்கள் குறைந்து கொண்டே வந்தது. நிச்சயதார்த்தத்திற்குப் பிறகு நாட்கள் வெகு வேகமாக ஓடின.

திருமண நாட்களை எண்ணியே விமலாவின் எண்ணங்கள் ஊர்ந்தன.

பள்ளியில் படிக்கும் பொழுதே விமலாவின் உடை நாகரீகம் சற்று அதிகம்.

திருமண நிச்சயத்துக்குப் பின் இப்பொழுது சற்று மாறியிருந்தது.

சோளியின் கை தோள் பட்டையில் இருந்து மூன்று அங்குளம் கிழ் இருந்தது.

புடவையின் தலைப்பு தோள் பட்டையில் இருந்து ஒரு சான் தள்ளி இருந்தது.

விமலாவை சென்னை நாகரீகம் திருமணத்துக்கு முன்பே பற்றிக் கொண்டது.

தினம் ஒரு கடிதம் இந்திரா நகரில் இருந்து விமலாவுக்கு வரும். அதேபோல் இந்திரா நகரில் இருக்கும் பலராமனுக்குப் பாயும்.

அ ர சி ன ரா ல் பலராமனுக்கு அளிக்கப்பட்டிருந்த குவார்ட்ரஸ் இதுவரை பலராமன் ஒருவனை மட்டும் தாங்கிக் கொண்டிருந்தது. இனி திருமணத்துக்குப்பின் விமலாவும் அதில் தானே குடியேறப் போகிறாள்.

விமலாவினுடைய வீட்டிலே சலசலப்பு அதிகமாகியது. அன்று காலையில் இருந்தே ஒருவித பரபரப்பு. அன்று மாலைதான் பெண் அழைப்பு. விமலாவின் செயலே தனி ரகமாக இருந்தது.

எந்த திருமண மண்டபம் விமலாவின் திருமணத்துக்கு ஏற்பாடாகி இருந்ததோ அந்த திருமண பண்டபத்தை நோக்கி விமலாவின் குடும்பத்தைத் தாங்கிக் கொண்டு கார் பறந்தது.

அந்தக் காரைப் பின்பற்றி அரியையும் மூர்த்தியையும் ஏற்றிக் கொண்டு ஸ்கூட்டர் விரைந்தது.

மூர்த்தியின் மனத்திலும் அரியின் மனத்திலும் தழும்பு ஏற்பட்டாலும் கூட அவர்கள் அதனை மூடி மறைத்து விட்டனர்.

அரியின் உள்ளத்துச் சோகத்தின் சின்னம் தாடி ஒரு சிலருக்கு அவனுடைய நிலையை உணர்த்தியது.

மணநாள், விரைவாகக் கழிகிறது. ஆங்காங்கே கூச்சல், கும்பல் குதூகலிப்பு, கும்மாளம், கேளி, கிண்டல், அனைத்தும் இருக்கிறது.

அரியும் மூர்த்தியும் ஓர் ஒதுக்குப் புறமாக நின்று ஏதோ வரவேண்டுமே என்பதற்காக வந்து விட்டது போன்று நின்று இருந்தனர்.

இருவரும் அடிக்கடி சில செய்திகளுக்கு அப்பாற்பட்ட விஷயத்தைப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

மாலையில் கல்யாண மண்டபமே காலியாகிறது.

இந்திரா நகரில் பலராமன் வீட்டில் சில சுப சடங்குகள் நிகழ்கின்றன.

பெண் அழைப்பிலிருந்தே விமலாவின் முகத்திலும் பலராமன் முகத்திலும் ஒரு விதமான வெற்றிப் புன்னகை விளையாடிக் கொண்டிருந்தது.

அந்த புன்னகையின் விவரம் அறிந்தவர்கள் மட்டும் விளையாட்டாக கேளி செய்து கொண்டிருந்தனர்.

சுபச் சடங்குகள், சம்பிரதாயங்கள் முடிந்தபின் சென்னையிலே இருந்து அறுபத்தி ஏழாவது மைலில் உள்ள வீட்டிற்கு புறப்படுகின்றனர்.

வருகின்ற வழியில் பின் சீட்டில் அமர்ந்திருந்த விமலாவின் கால்களும் பலராமனின் கால்களும் விளையாடுகின்றன. பின்னிப் பிணைகின்றன.

அவர்கள் அருகில் இருந்த அவளுடைய அத்தை, மர்மப் புன்னகைப் பூக்கின்றாள்.

காரின் பின்னால் மூர்த்தி ஸ்கூட்டரை செலுத்திக் கொண்டிருந்தான்.

(14-ஆம் பக்கம் பார்க்க)

★ Matchless Quality
★ Intricately Woven
★ Colourful, And lively

Co-optex

HANDLOOM FABRICS

Cost a lost less... Last a long time

Tamil Nadu Handloom Weavers' Co-operative Society Ltd.,
(Balasundaram Buildings)
34/1-A, Pantheon Road, Egmore, Madras-8.

# பட்டினிப் பட்டாளமும் பூசாரிக் கூட்டமும்

சமயத்திலே உயிரை வைத்து அதிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்தவர்கள் நமது கண்ணின் முன்னால் எப்படி யிருக்கிறார்கள் என்பதை ஆலோசித்துப் பாருங்கள்: மடாதிபதிகளாகஆசை கொண்ட குட்டி மடாதிபதிகள் மடாதிபதிகளின் மென்னியை அழுத்தியேனும் அந்தப் போகத்தை அனுபவிக்க நினைக்கிறார்கள் என்பதற்கான கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். மடங்களில் பல வக்கீல்களுக்கும் சாட்சிகளுக்கும் ஏராளமான பணத்தைச் செலவு செய்துகொண்டு உத்தியோகஸ்தர்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். மடாதிபதிகளும் மகந்துக்களும், பெருமாளும் பிரசாதமும் பலனற்றவை என்றும் பலபாவங்களைத் தீர்க்கும் அவர் தீர்த்தம் உருசியற்றதென்றும் தள்ளியும், அர்ச்சகர்கள் அசுத்தர்கள் என்றும், பாகவதர்களுக்கு உபசரணை தெரியாதென்றும் தள்ளிவிட்டு ஆப்பிள், ஆரஞ்சு, ஐஸ் சோடா முதலியவற்றால் ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குருக்கள் கும்பாபிஷேகத்தில் உயிர் வைத்துக் கொண்டு செட்டியார் வரவை எதிர்பார்த்துச் சுவாமியைத்தினம் அசைத்துக்கொண்டே ,இருக்கிறார்கள். சமயத்தைக் காப்பாற்றும் புரோகிதர்களோ எந்தப் பணக்காரன் வீட்டில் நமக்கு ஒரு பசு தானம் கிடைக்கும் என்கிற கவலையிலேயே இருக்கிறார்கள். சமயத்திலே உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக் கடவுளே உண்டுபண்ணின பார்ப்பனர்களில் சிலர் குதிரைப் பந்தயம் பார்க்க, நீலகிரிக்குப் போய் விடுகிறார்கள். லீவ் சமயமானதினால் பெரிய மனுஷர்களைப் பார்த்துவரச் சிலர் சென்றுவிடுகிறார்கள், உத்தியோகம், பள்ளிக்கூடம் முதலியவைகளில் போய்ச் சேருவதற்கு வேண்டிய அருகதையைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் பலர். கலியாணம் கல்லெடுப்பு கருமாந்திரம் இன்னும் பல நன்மை தீமைகள் இவை யார் வீட்டில், எந்தக் கிராமத்தில் என்று விசாரித்துக்கொண்டும் அநேகர் இருக்கிறார்கள். இதுவுமல்லாமல் வருணாசிரம சபைக்கும் சனாதன தரும சமயத்துக்கும் பிராமண சபைக்கும் தலைவர்களாயிருப்பவர்கள் எல்லா ஆசைகளையும் விட்டுச் சன்னியாசம் அடையும் வயது வந்தும் வக்கீல் வேலையை விடாமல் வருகிற பணத்தை யெல்லாம் அள்ளிப் போட்டுக்கொண்டு உலக சுகங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண்டு, பிராமணன் இங்கிலீஷ் படிக்கக்கூடாது, பழைய வேதங்களையே படித்துப் பழைய அந்தஸ்தை அடையவேண்டும் என்று உபதேசம் செய்கிறார்கள்.

> எத்தகைய முற்போக்கு நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பில்லை யென்றால், அந்த நடவடிக்கைகளுக்கு முற்போக்கு என்ற பெயர் பொருந்தாதல்லவா !
>
> முற்போக்கு என்றாலே எதிர் நீச்சல்தான் !
>
> எதிர்நீச்சலிலேதான் இன்பமும் பிறக்கிறது ! இன்னலும் அகல்கிறது !
>
> இந்தியாவின் கோயில் சொத்துக்களைப்பற்றிய ஒரு படப்பிடிப்பு இது. 20-1-'46ல் 'திராவிடநாடு' இதழில் வெளிவந்திருக்கிறது. நாமும் இது பற்றிச் சிந்திக்க இப்போது பயன்படுமில்லையா ?

நமது பண்டிதர்களோ புரான
பிரசங்கம் ஒழிந்துபோகுமே எ
னும் அச்சத்தினால் அங்குமிங்
அலைந்தும் எழுதிக்கொண்டு மி
கிறார்கள். இவ்வளவு நிலை
லிருக்கிறது சமயத்தில் உயிர்வை
துக் கொண்டிருப்பவர்களின் லட
ணம் என்று, கைவல்யம் எழு
கிறார். இங்கு, இன்றுள்ள, சமய
சாரிகளின் வாழ்க்கையைச்
யானபடி படம் பிடித்துக் காட
கிறார். இப்படி மக்கள் சமுதாய
திலே சமயத்தின் பெயர் கூ
கொண்டு ஒரு சிறு கூட்ட
வாழ்ந்து, மக்களின் வாழ்
வதைத்து வருவதைக் கண்டிப்ப
எப்படித் தவறான காரியமாகு
இதுபோன்ற நிலைமையிலே இரு
நாடுகளிலெல்லாம், சமயத்தி
பெயரால் நடத்தப்பட்ட கொ
மைகளை மக்களிடம் எடுத்துக் கூ
தெளிவு உண்டாக்கி, புதுமைய
ஆர்வம் பிறக்கச் செய்து, பு
சியை ஏற்படுத்த அறிஞர்கள் அ
சியதில்லை. சோவியத் ரஷியாவி
இந்தத் துறையிலே சோர்விலா
உழைத்தே வெற்றி பெற்றன
பட்டினிப் பட்டாளத்துக்கும் பூச
ரிக் கூட்டத்துக்கும் நடைபெற்
பலமான போராட்டமே சோ
யத் புரட்சி. சோவியத் நாட்டி
புதுமை உதயமான காட்சின
நினைவிலே கொண்டு வரும்பே
தெல்லாம், சமயாச்சாரிகள் என்
வர்களால் சமுதாயம் சீரழிகிற
என்பதைக் கண்டு பிடித்த முத
வேலை, வெற்றிகரமாக நடந்தே
யதாலேயே, பொருளாதார அடி
படையையும், அரசாட்சியின் த
மையையும், பிறகு மாற்
அமைக்க முடிந்தது என்பது தெ
வாகும். இன்று இங்கு இருக்கு
நிலையே ரஷியாவிலே அன்று இரு
தது. அது மாறினதாலேயே அங்

ிறகு மக்கள் வாழ்வு, மலர்ந்தது. ங்ஙனம்?

ருஷிய மத ஆச்சாரிகள் மிகப் ழைய காலக் கொள்கைக்காரர் ள். ருஷிய அரசன் கொடுங்கோன் மையில் கொள்ளை அடித்ததுபோல் த ஆச்சாரிகளும் மக்களிடம் கொள்ளை அடித்தார்கள். மத ருக்களுக்கு பாமர மக்களிடம் ான் அதிக செல்வாக்கு இருந் து. அதை நிலைநிறுத்த பாமர க்களை படிக்க விடாமலும் ஆராய்ச்சியில் அறிவைச் செலுத்த விடாமலும் மதக்குருக்கள் தடுத் துக்கொண்டே வந்தார்கள், இதன் யனாய் ருஷிய பாமர மக்கள் மிக்க மூடநம்பிக்கைக்காரர்களாய் இருந்தார்கள். சந்நியாசிகளிட மும், எலும்புகளிடமும் மந்திரங் ள் மாயங்கள், இயற்கைக்குமீறின அதிசயங்கள் ஆகியவைகளிடத் தில் அவர்களுக்கு மிகுந்த நம்பிக் கையும் பக்தி விசுவாசமும் உண்டு. இதை இந்தப்படி நம்பும்படி செய் வதே மத ஆச்சாரிகளின் வேலை யாய் இருந்தது. வயல்களில் புண் ணிய தீர்த்தத்தை தெளித்தால் பயிர்கள் செழித்து விளைந்துவிடும் என்று கருதி இருந்தார்கள். நோயாளி தலையில் புண்ணிய தீர்த்தம் தெளித்தால் காயலா செளகரியமாகிவிடும் என்று நம்பி இருந்தார்கள்.

## தீவிரவாதிகள்

தீவிரவாதிகள், அதிர்ஷ்டமென் பதையும் மற்றும் தெய்வீகம் என் பதையும் எல்லாம் பொய்யாக்கி ஞர்கள். விஞ்ஞான பூத பௌதிக முறைப்படி ஒவ்வொரு காரியத் தையும் மெய்ப்பித்துக் காட்டி ஞர்கள்.

மதத்திற்கும், அரசாங்கத்திற் கும் சம்பந்தமில்லாதாக்கினுர்கள். மதப்படி செய்யும் கலியாணங்கள் முதலிய சட்டங்கள் சட்டப்படி ிராகரிக்கப்பட்டன.

18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறு வர்களுக்கு மதபோதனை செய்யக் கூடாதென்று சட்டம் செய்தார் கள்.

பள்ளிக்கூடங்கள் முழுவதும் சர்க்கார் பள்ளிக்கூடங்களாயின. அப்பள்ளிக்கூடங்களில் மதப்படிப் புகள் கூடாதென்று திட்டம் செய் தார்கள்.

மதவிஷயங்களில் அவரவர்கள் மனச்சாட்சிப்படி நடக்கச் சுதந்தி ம் கொடுக்கப்பட்டது. வைதீக மதத்தால் நசுக்கப்பட்டவர்கள் எல்லாம் தலை தூக்கி நடக்க வசதி ஏற்பட்டது.

ஆலய சொத்துக்கள் பற்றியும், மடசொத்துக்கள் பற்றியும், சட்டம் ஏற்படுத்தி அவைகளைக் கைப் பற்றியும், தனிப்பட்டவர்கள் சொத்துக்கள் பற்றியும் சட்டமேற் படுத்தி தேவைக்குமிஞ்சிய சொத் துக்களைக் கைப்பற்றியும் அவை களை நாட்டின் நன்மைக்கவசிய மான காரியத்திற்குச் செலவு செய்தும் வருகிறுர்கள். கோவில் கட்டிடங்கள் முழுவதும் முனிசிபா லிட்டிக்குச் சொந்தமாக்கி விட் டார்கள். பிரார்த்தனை செய்ய விரும்புவோர்கள் முனிசிபாலிட்டி யாரது அனுமதி பெற்றுல்தான் கோவிலுக்குள் விடப்படுவார்கள். பரம்பரையாகக் கோவில் சொத்தை அனுபவித்துக்கொண்டு கோவிலின் பேரால் ஆதிக்கம் செலுத்தி வந்தவர்களுக்குப் பொதுவுடைமை மதக்காரர்களின் செய்கை பொறுக்க முடியவில்லை. இந்தக் கூட்டத்தார் பாமர மக் களை பொதுவுடைமைக்காரர்கள் மீது ஏவிவிட பல்வேறு வகையா லும் முயற்சி செய்தார்கள். கெட்ட எண்ணம் கற்பித்தார்கள். அவர் களை அரக்கர்கள் என்றுர்கள். அரக்கர்களால் உலகம் நாசமாகி விடும் என்றுர்கள்.

பணக்காரர்கள் எல்லாம் வைதீ கர்களுடன் சேர்ந்துகொண்டார் கள். இவர்களும் சேர்ந்து எதிர்த் துப் பார்த்தார்கள். முடிவில் பொதுவுடைமையும், சமதர்ம முமே வெற்றி பெற்றது. பொது வுடைமை சர்க்கார் கடைசியாகச் சில மடாதிபதிகளையும், மதக்குருக் கள்களையும் தேசப்பிரஷ்டம் செய் தார்கள். பல குருக்கள்மார்களின் தலையை வெட்டினுர்கள். பொது ஜனங்களின் நன்மைக்கு விரோத மில்லாததும் சமாதானத்திற்குப் பங்கமில்லாததும் பொது உடைமை சர்க்கார் கொள்கைக்கு விரோதமில்லாததுமான மத அனுஷ்டானத்தை யார் அனுசரிப் பதைப் பற்றியும் சர்க்காருக்குக் கவலை இல்லை என்று விளம்பரம் செய்து விட்டார்கள். இதுசமயம் ருஷ்யாவில் கோவில்களுக்குப் பணம் இல்லாததாலும் மதகுருக் களுக்கு வரும்படிக்கு மார்க்கமில் லாததாலும் இப்போது அங்கு கோவில், மதம், என்பன போன்ற பேச்சுக்கள் மிகவும் அடங்கி விட் டன.

*1921*-ம் வருடத்தில் ருஷ்யா வில் பஞ்சம்வந்தகாலத்தில் ஜனங் கள் பட்டினியால் மடிவதைப் பார்த்த பொதுவுடைமைக்காரர் கள் கோவில்களில் தூசிபடர்ந்து துருப்பிடித்துக்கிடந்த வைரம், கெம்பு, வைடூரியம் முதலிய ரத் தனக்குவியல்களையும், வெள்ளி உலோகங்களையும் கொடுக்கும்படி கோவில் நிர்வாகிகளைக் கேட்டார் கள். அவர்கள் கொடுக்கமாட் டோமென்று மறுத்ததுடன் "ஓ பக்தர்களே! கோவில் சொத்து பறிபோகிறது காப்பாற்றுங்கள்" என்று ஓலமிட்டார்கள். இதற் குள் சர்க்கார்படை வந்தது. சர்க் கார் படைக்கும் பக்தர்களுக்கும் போர் நடந்தது. இந்தச்சத்தர்ப் பத்தில் சில பாதிரிகள் நகைகளைத் திருடிக்கொண்டு போனுர்கள்.

பிறகு சர்க்கார் அவர்களை ஜெயி த்து வழிமறித்து நகைகளைக்கைப் பற்றி அவைகளுக்குத்தானியங் கள் வாங்கி ஏழைகளுக்கு உதவி, பஞ்சத்தைத் தணித்தார்கள்.

★

---

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின் சீட்டில் உட்கார்ந்து இருந்த அரி, மூர்த்தியின் முதுகில் சாய்ந்து கொண்டு பேசிக் கொண்டே வந்து கொண்டிருந் தான்.

சென்னையிலிருந்து வேலூரை நோக்கி நீண்ட தார்ரோட்டில், சென்னையை அடுத்து அறுபதா வது மைலில் உள்ள கிராமத்திற்கு செல்லுகின்ற கிளை சாலையில் கார் திரும்பியது.

இதுவரை ஆடாமல் வந்த கார், கரடு முரடான அந்த சாலையில் மெதுவாக செல்கிறது.

அந்த கிராமத்திலிருந்து பதி னைந்தாவது மைலில் உள்ள கல்லூ ரியை நோக்கிச் செல்கிறது ஸ்கூட் டர்.

இனி இருவரும் நன்றுக படிப்பர். அவர்களுடைய வாழ்க்கையில் சில தேவையில்லாத மகரந்தங்கள் தோன்ற இருந்தன. ஆனுல் அவை கள்தான் உதிர்ந்து விட்டனவே. இனி நன்றுகத்தானே இருப்பார் கள். ஃ

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் பிரிவுத் துயரைத் தாங்க முடியவில்லை, அவளால். உற்ற தோழியிடம் உள்ளம் படும் வேதனையை உரைக்கின்றாள். அவ்வேதனை, வியப்புத் தரும் வினாக்குறியாக வெளிப்படுகிறது.

'அதுகொல் தோழி! காம நோயே?' எனத் தோழியிடம் வினவுகின்றாள். இதுநாள் வரை காதல் நோய் என்றால் என்ன என்றே தெரியாதவள் போலவும், இப்பொழுது தெரிந்துகொள்ள விரும்புவது போலவும் வினாக்கணையைத் தொடுக்கின்றாள், அவ்வேல் விழியாள்! தலைவன் அவளை விட்டுப் பிரிந்த நாள் முதலாகக் கண் இமைகளும் பிரிந்தே இருக்கின்றன. ஆம்! தலைவன்மேல் அவளுக்கு ஒரே ஏக்கம். அதனால், தூக்கம் வரவில்லை. இமைகள் மூடவில்லை. இரவெல்லாம் விழித்துக் கொண்டிருக்கின்றாள். "தூக்கம் வராமல் துடிக்கின்றேனே! இதற்குப் பெயர்தான்காதலா...?" எனத் தோழியிடம் கேட்கின்றாள்

"அதுகொல், தோழி! காம நோயே?
.................................
மெல்லம் புலம்பன் பிரிந்தென
பல்இதழ் உண்கண் பாடு ஒல்லாவே"

குறுந்தொகையில் நரிவெரூஉத் தலையார் பாடிய நயமிக்க பாடல் இது; தலைவியின் ஆற்றாமையை வெளிப்படுத்தும் அழகிய பாடலாகவும் மிளிர்கின்றது.

குறுந்தொகையில் குலமகளிரும் உண்டு; விலைமகளிரும் உண்டு. 'பரத்தையிற் பிரிவு' அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. தலைவியைப் பிரிந்த தலைவன், பரத்தையை நாடும் பழக்கம் உடையவனாகவும் இருந்தான். தலைவன் விலைமகளை நாடிச் செல்லும் நாட்களில், தலைவி அடையும் வேதனையோ சொல்லில் அடங்காது. தலைவனைப் பிரிந்த துக்கம் ஒருபுறம், பரத்தையோடு கொஞ்சிக் குலாவும் செய்தி அறிந்த துயரம் ஒருபுறம், அத்துன்பத்தைத் துடைக்க வழி அறியாமல் துடிக்கின்ற உள்ளம் ஒருபுறம்—இவற்றிற்கு இடையே அகப்பட்டு—அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்ற தலைவி, 'நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமுமாக' வளர்ந்தவள், இப்பொழுது மெலிகின்றாள்—தலைவனை எண்ணி நலிகின்றாள். செப்பினுள் இட்டுவைத்த சூடாமலர்போல் வாடுகின்றாள்,

"மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய் சாயினளே"

என்னும் குறுந்தொகை வரிகள், அக்கொடி இடையாளின் வாடிய நிலையினை அழகுற வருணிக்கின்றது.

தலைவன் பொதுமகளோடு பொழுதுபோக்கும் நிலை அறிந்து, உடல்மெலிந்து, உள்ளம்சோர்ந்து தலைவி உழன்றாலும், அக்கொடுமைக்கான காரணத்தை யாரிடத்தும் கூறாத நற்பண்பு உடையவளாகத் திகழ்ந்தாள். தலைவன் செய்த கொடுமையை மறந்து, அவன் நாணும்படி எதிர்கொண்டு வரவேற்கும், நல்லிதயம் பெற்ற நங்கையாகக் குறுந்தொகைத் தலைவி காட்சியளிக்கின்றாள்.

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்
(குறள், 314)

என்பது வள்ளுவர் வாக்கு.

கொடுமை செய்தான் தலைவன். அக்கொடுமையை பிறர் அறியா வண்ணம் மறைத்தனள் தலைவி. மறைத்ததோடு மட்டும் நின்றனளா? அதுதான் இல்லை! மனை நோக்கி வந்த மணாளனின் மனம் நோகாமல் வரவேற்கின்றாள். இவ்வரவேற்பு, அவன் எதிர்பாராத ஒன்று. 'எவ்வளவு கொடுமையைச் செய்தோம்; அதனை மறந்து வரவேற்கின்றாளே' என எண்ணுகின்றான். எண்ணி, தன் செயலுக்காக நாணுகின்றான். அவன் நாணும் வண்ணம் நடந்து கொள்கின்றாள், நல்லுள்ளங் கொண்ட அந்நங்கை. 'ஓரம் போகியார்' பாடல் இதோ:-

"யாய் ஆகியளே, விழவு முதலாட்டி
.................................
காஞ்சி ஊரன் கொடுமை
கரந்தனள் ஆகலின், நாணிய வருமே!!

தலைவியானவள், தலைவன் செல்வம் பெறுவதற்குக் காரணமாக உள்ளாள். 'விழவு முதலாட்டி' என்றது தலைவி இல்லறம் நிகழ்த்த வந்த பிறகே, தலைவனுக்குச் செல்வம் உண்டாயிற்று என்பதனைத் தெரிவிப்பதாக 'விளக்கவுரைகாரர்' விளம்புகின்றார். அச்செல்வம் வந்ததால்தான், அவன் பரத்தையோடு கொஞ்சி மகிழச் சென்று விடுகிறான்.

"காஞ்சிமரத்தை உடைய ஊரைச்சேர்ந்தவன், அத்தலைவன். அவன் செய்த கொடுமையை மறைத்தாளாதலின், அவன் நாணும்படி எதிர்கொண்டு அழைக்க வருகின்றாள்" எனத் தலைவியின் மாண்பினை இப்பாடல் மூலம் தெரிவிக்கின்றாள், தோழி. "மறப்போம்; மன்னிப்போம்" என்னும் அறவழி நின்று அரவணைத்துச் செல்லும் அருங்குணச் செல்வியரைக் குறுந்தொகையில் பரக்கக் காணலாம்.

குறுந்தொகைப் பாடல்கள் வாயிலாக அக்கால மகளிர் நிலையினை ஓரளவு கண்டோம். காணவேண்டியவை இன்னும் எராளம் உள்ளன. காதலைக் 'கண்' எனப் போற்றிய காரிகையர், காதலனை உயிராக எண்ணி வாழ்ந்தனர்; 'உடன் போக்கு' நிகழ்ச்சியினை மகிழ்ச்சியுடன் ஏற்றனர்; பிரிந்து சென்ற தலைவனை நினைத்து வருந்தி நைந்தனர்; இரவெல்லாம் தூங்காது ஏங்கி இருந்தனர்; விலைமகளை நாடித் தலைமகன் செல்லினும் விவேகமுடன் நடந்து கொண்டனர்; உற்ற தலைவனின் குற்றத்தை, உற்றார் உறவினர் ஊராருக்கு மறைத்தும், தான் மன்னித்தும் உயரிய தியாக வாழ்வு வாழ்ந்தனர்; வேசியின் இல்லம் சென்று கூசிவரும் நாயகனைப் பாசமுடன் பேசி பரிவுடன் வரவேற்றனர்; ஆம்! தலைவனையே நாணத்தால் தலைகுனியச் செய்தனர்; குன்றா விளக்காகக் குவலயத்தில் சிறந்தனர். குறுந்தொகை மகளிரின் பெருங்குணச் சிறப்பினைச் சிந்தையில் நிறுத்துவோம். செந்தமிழ்ப் பண்பினைச் செகத்தினில் உயர்த்துவோம்!

★

# 251-வது லட்சாதிபதியாக நீங்களே இருக்கலாமே!

## இன்றே வாங்குவோம் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு




தமிழ்நாட்டின் பரிசுத் திட்டத்தால் இதுவரை 250 லட்சாதிபதிகள் தோன்றியுள்ளனர். பரிசுத் திட்டத்தின் பெருமைதான் என்னே! 251-வது லட்சாதிபதியாக நீங்களே ஆகிவிடலாமே! ஒரு ரூபாய்தான். அது உங்களுக்கு உயர் வாழ்வு தருகிறது. நாட்டுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. வளம் சேர்த்து உங்கள் வீட்டையும், கல்வி, மருத்துவ, வீட்டு வசதிகள் மூலம் நாட்டையும் காக்கிறது.

## ரூ.3,00,000 உங்களுக்கே கிடைக்கலாம்!

மொத்தப் பரிசுத் தொகை: ரூ.17,50,000

மொத்தப் பரிசுகள் : 5328

தமிழ்நாடு தான் இவ்வளவு பெரிய பரிசுகளைத் தருகிறது.

செலவு ஒரு ரூபாய்




வரவோ பல லட்ச ரூபாய்

கவனிக்கவும்

### திருத்தியமைக்கப்பட்ட புதிய பரிசுத் திட்டங்கள்

**சிறப்புப் பரிசுகள்**

| | |
|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 3,00,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசுகள் இரண்டு: (ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,00,000) | ரூ. 2,00,000 |
| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) | ரூ. 5,00,000 |

**சாதாரணப் பரிசுகள்**

| | | |
|---|---|---|
| மூன்றாவது பரிசுகள் ஐந்து | ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000 | ரூ. 50,000 |
| நான்காவது பரிசுகள் பத்து | ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 | ரூ. 50,000 |
| ஐந்தாவது பரிசுகள் ஐம்பது | ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 | ரூ. 50,000 |
| ஆறாவது பரிசு ஆயிரம் | ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 | ரூ. 1,00,000 |
| (இது ஒவ்வொரு வரிசைக்கும்) | | ரூ. 2,50,000 |

**குலுக்கல் நாள்: 30-8-1971**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

உடனே வாங்குங்கள். இல்லையேல் கிடைக்காது.

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

• 5 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது

...யர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்.